# ஏன் செல்கள் புதுப்பிக்கப்பட வேண்டும்?

நன்மாறன் திருநாவுக்கரசு
tnmaran25@gmail.com



நமது உடல் தோராயமாக 40 டிரில்லியன் (1 டிரில்லியன் - ஒரு லட்சம் கோடி) செல்களால் ஆனது. இதில் 330 பில்லியன் (1 பில்லியன் - 100 கோடி) செல்கள் தினமும் இறந்து, புதிதாக உருவாகின்றன.

செல்களின் இறப்பு நாம் பிறப்பதற்கு முன்பே தொடங்கிவிடுகிறது. உதாரணமாக மனிதக் காதுக்குள் இருக்கும் எலும்புகள் உருவாவதற்கு உதவிய செல்கள், நாம் கருவில் இருக்கும்போதே அழிந்துவிடுகின்றன. நாம் கருவாக இருக்கும்போது சில செல்கள் சரியான நேரத்தில் இறக்கவில்லை என்றால், மனிதனுக்கு உண்டான தோற்றத்தையே பெற முடியாது.

விஞ்ஞானிகள் செல்களின் இறப்பை இரண்டு வகையாகப் பிரிக்கின்றனர். ஒன்று செல் தன்மடிவு (apoptosis). இந்த வகை செல் இறப்பு வளர்ச்சியின் ஒரு பகுதியாக உடலாலேயே திட்டமிடப்பட்டு நிகழ்த்தப்படுகிறது. உதாரணமாக நம் சருமத்தில் தினமும் கோடிக்கணக்கான பழைய செல்கள் அழிவதும், புதிய செல்கள் வளர்வதும் நடைபெறுகின்றன. அது இந்த வகையின் கீழ்தான் வரும். நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லும் குறிப்பிட்ட வாழ்நாளைக் கொண்டிருக்கும். அந்த வாழ்நாள் முடிந்துவிட்டாலோ சரி செய்யாத அளவுக்கு செல் சேதமடைந்துவிட்டாலோ தானாகவே சுருங்கி இறந்துவிடும்.




இன்னொரு வகை செல் இறப்பு திசு நசிவு (Necrosis). ஒரு செல் நச்சினாலோ சுற்றுப்புறப் பாதிப்புகளாலோ சரிசெய்ய முடியாத அளவிற்குச் சேதமடைந்து அழிவது இந்த வகையில் வரும். உதாரணமாக, தீயினால் உடல் திசுக்கள் கருகுவது.

நமது உடலில் 200 வெவ்வேறு வகையான செல்கள் இருக்கின்றன. இவைதான் எலும்பு, இதயம், நுரையீரல், கண்கள் என அனைத்தையும் கட்டமைத்துள்ளன. இவை ஒவ்வொன்றும் குறிப்பிட்ட காலத்தில் இறந்து புதுப்பிக்கப்படுகின்றன.

அதற்காக இந்த செல்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் இறப்பதில்லை. ஒவ்வொன்றும் குறிப்பிட்ட கால அளவை எடுத்துக்கொள்கிறது. இவற்றில் மூளையில் இருக்கும் நியூரான்கள், மிகக் குறைந்த எண்ணிக்கையில் இறப்பைச் சந்திக்கின்றன. நமது மூளையில் பின்னிப்பிணைந்து காணப்படும் இந்த நியூரான்கள்தாம் நினைவுகள், எண்ணங்கள், பிரக்ஞையைத் தோற்றுவிக்கும் பணிகளைச் செய்கின்றன. அவை அடிக்கடி இறந்தாலோ மாற்றப்பட்டாலோ பிரச்சினையாகிவிடும் அல்லவா? அதனால்தான் நியூரான்கள் பெரிதும் மாற்றப்படுவதில்லை.

இதே காரணத்தினால்தான் நமது மூளையிலோ தண்டுவடத்திலோ காயம் ஏற்பட்டால் அவை நிரந்தரமானதாக, குணப்படுத்தக் கடினமானதாக இருக்கிறது. ஆனாலும் நம் மூளையின் ஒரு பகுதியான ஹிப்போகேம்பஸில் இருக்கும் நியூரான்களின் வளர்ச்சி மட்டும் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து நிகழ்வதாகக் கண்டறியப்பட்டுள்ளது. மரக்கிளைகள் கழிக்கப்பட்டு புதிதாக வளர்வதுபோல இந்த ஹிப்போகேம்பஸில் காணப்படும் நியூரான்களில் மூன்றில் ஒருபகுதி தானாகவே அழிக்கப்பட்டு மாற்றப்படுகிறது. இந்த ஹிப்போகேம்பஸ் பகுதிதான் நமது கற்றலுக்கும் நினைவாற்றலுக்கும் முக்கியமானதாக இருக்கிறது.

அதேபோல இதயத்தின் தசைகளில் காணப்படும் செல்களும் குறைவாகவே அழிந்து பிறக்கின்றன. இதயம்தான் நாம் உயிர்வாழ்வதற்கு அத்தியாவசியமான உறுப்பாக இருக்கிறது. நமது உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் தேவையான ஆக்சிஜனை ரத்தத்தின் மூலம் கொண்டுசெல்லும் வேலையைச் செய்கிறது. அதன் செல்களை அடிக்கடி மாற்றுவது அபாயம் நிறைந்த சூழலை உண்டாக்கும் என்பதால் அங்கேயும் செல்களின் இறப்பு குறைவாக இருக்கிறது.



உடலின் மற்ற செல்கள் அனைத்தும் குறிப்பிட்ட கால இடைவெளியில் தொடர்ந்து புதுப்பிக்கப்படுகின்றன. உதாரணமாக, மிகவும் வலுவான, நிரந்தரமாகத் தோன்றும் எலும்புகள் 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றன. நமது ரத்தத்தில் உள்ள சிவப்பு அணுக்களின் வாழ்நாள் வெறும் 120 நாள்கள்தாம். வெள்ளை அணுக்களின் வாழ்நாளோ சில மணி நேரங்கள்தாம். உணவு ஜீரணத்துக்கு உதவும் பெருங்குடலில் உள்ள செல்கள் வாரத்துக்கு ஒருமுறை புதுப்பிக்கப்படுகின்றன.

இவ்வாறு உடலில் இறக்கும் செல்களின் கழிவுகள் மூலம் வெளியேற்றப்பட்டு, புதிய செல்கள் வளர்கின்றன.

ஏன் செல்களின் இறப்பு நடைபெற வேண்டும்?

நம் உடலை ஒரு வாகனத்தைப் போலக் கற்பனை செய்துகொள்ளுங்கள். வாகனம் சரியாக ஓடுவதற்குப் பராமரிப்பு அவசியம் அல்லவா? வேண்டாத பழைய பாகங்களை நீக்கிவிட்டு, புதிய பாகங்களைப் பொருத்தி அவ்வப்போது சரிசெய்தால்தானே வாகனம் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் ஓடும். அதேபோல நம் உடலும் எந்தப் பிரச்சினையும் இல்லாமல் இயங்குவதற்காக செல்களின் இறப்பு திட்டமிடப்பட்டு, ஒழுங்கமைப்புடன் நடைபெறுகிறது.

(விடைகளைத் தேடுவோம்)

# தொகுதி மறுவரையறை: வடக்கு – தெற்கு பேதங்களை ஆழமாக்கக்கூடும்



கிறிஸ்டோஃப் ஜாஃப்ரலோ
பேராசிரியர், கிங்ஸ் இந்தியா இன்ஸ்டிடியூட், லண்டன்.
ஆ.கலையரசன்
உதவிப் பேராசிரியர்,
சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனம்.

சில மாதங்களுக்கு முன் நடந்துமுடிந்த கர்நாடக சட்டமன்றத் தேர்தலில் பாஜகவின் தோல்வி, இந்தியாவில் வடக்கு–தெற்கு இடையிலான பிளவுகளை அரசியல்ரீதியான பொருளில் மேலும் துலக்கமாக்கியுள்ளது. மத்தியில் ஆட்சியில் இருக்கும் பாஜக விந்திய மலைக்குக் கீழே உள்ள எந்த மாநிலத்திலும் ஆட்சியில் இல்லை. சட்டமன்றத் தேர்தல் வெற்றிக்குக் காங்கிரஸ் கட்சியை வாழ்த்திய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், "திராவிட நிலப்பரப்பில் இருந்து பாஜக முற்றிலுமாக அகற்றப்பட்டுள்ளது" என்று கூறியிருந்தார். சொல்லப்போனால், பண்பாடு, மொழி, அரசியல், பொருளாதார வளர்ச்சி, சமூக மாற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் வடக்கு–தெற்குப் பிளவுகள் கூர்மையடைந்துவருவதன் விளைவாகக் காங்கிரஸின் வெற்றியைப் பார்க்கலாம்.

**கல்வியும் சேர்க்கையும்:** ஆங்கில மொழி, காலனிய ஆட்சியின் எச்சம் என்று விமர்சிக்கப்பட்டாலும், அது பலருக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெறுவதற்கான வாகனமாகத் திகழ்கிறது. ஆங்கிலத்தின் இந்தப் பயனை தெற்கு அங்கீகரித்தது. ஆனால், வடக்கில் உள்ள பல மாநிலங்கள் அம்மொழியின் பயன்பாட்டை நிறுத்த முயன்றன. எப்படிப்பார்த்தாலும் வேலைவாய்ப்பைப் பெறுவதற்கும் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கும், சேவைத் துறையின் ஆதிக்கம் நிறைந்த நவீனப் பொருளாதாரத்துக்குள் நுழைவதற்கும் ஆங்கிலம் பல சாதகங்களை வழங்குகிறது. தேசிய மாதிரிக் கணக்கெடுப்பு அலுவலகத்தின் கல்விதொடர்பான கணக்கெடுப்பின்படி (2018), தென்னிந்தியாவில் அதிக சதவீதப் பள்ளிகளில் 12ஆம் வகுப்புவரை ஆங்கிலம்தான் பயிற்றுமொழி. தெலங்கானாவில் 63%, கேரளத்தில் 60.7%, ஆந்திரப் பிரதேசத்தில் 59%, தமிழ்நாட்டில் 44%, கர்நாடகத்தில் 35% பள்ளிகளில் ஆங்கிலம்தான் பயிற்றுமொழி. பிஹாரில் ஆங்கிலவழிப் பள்ளிகள் 6%, உத்தரப் பிரதேசத்தில் 14%. மேற்கு இந்தியாவில் மகாராஷ்டிரம் குழந்தைகளுக்குக் கல்வி அளிக்கும் விதத்தில் தென்னிந்திய சாயலைக் கொண்டிருக்கிறது (29 சதவீதத்தினர் ஆங்கிலவழிப் பள்ளிகளை நாடுகின்றனர்). ஆனால், குஜராத் (12.8%) வட இந்தியாவைப் பின்பற்றுகிறது.

வேலைவாய்ப்புகள் அனைவருக்கும் எளிதாகக் கிடைப்பதை உறுதிசெய்வதற்கும் பரந்துவிரிந்த உலகத்துக்கான சாளரமாகவும் ஆங்கிலவழிக் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. நவீனப் பொருளாதாரத்தில் பங்கேற்பைப் பெறுவதன்மூலம் மரபான அதிகாரத்தை மறுவிநியோகம் செய்வதற்கான வழிமுறையாகவும் உயர்கல்வி பார்க்கப்படுகிறது. உயர் கல்வி குறித்த அனைத்திந்தியக் கணக்கெடுப்பு (AISHE) 2020-21இன்படி, உயர்கல்வியில் மொத்த மாணவர் சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio) வட மாநிலங்களைவிட தென் மாநிலங்களில் மிக அதிகம்.

தெற்கில், 18–23 வயதுப் பிரிவைச் சேர்ந்த கிட்டத்தட்ட 50% இளைஞர்கள், ஏதேனும் ஒரு உயர்கல்வி நிறுவனங்களில் மாணவர்களாகச் சேர்ந்துள்ளனர். இதில் தேசிய அளவிலான சராசரி 27%தான். உயர்கல்வியில் சேர்வோரின் விகிதம் தமிழ்நாட்டில்தான் அதிகம் (47%). கேரளம் (43%), தெலங்கானா (39%) அதற்கு அடுத்த இடங்களில் இருக்கின்றன. இதில் பிஹார் 16% உத்தரப் பிரதேசம் 23% என மிக மோசமான நிலையில் இருக்கின்றன. விந்திய மலைக்குக் கீழே உள்ள எந்த மாநிலத்திலும் உயர்கல்வி மாணவர் சேர்க்கை விகிதம், தேசிய சராசரியைவிடக் குறைவாக இல்லை. ஹரியாணா, இமாச்சலப் பிரதேசம் தவிர்த்த – இந்தியை முதன்மை மொழியாகக் கொண்ட மாநிலங்கள், குஜராத், கிழக்கு மற்றும் வட கிழக்குப் பகுதிகள் ஆகியவை தேசிய சராசரியைவிடக் குறைவான உயர்கல்வி மாணவர் சேர்க்கையைக் கொண்டுள்ளன.

**வாசிப்புப் பண்பாடு:** பொது நூலகங்களைத் தொடங்குவதன் மூலம் வாசிப்புப் பண்பாட்டை வளர்த்தெடுப்பதிலும் தெற்கு முன்னோடியாகச் செயல்படுகிறது. இந்தியாவில் உள்ள 27,682 பொது நூலகங்களில், நான்கில் மூன்று பங்கு தென் மாநிலங்களில் அமைந்துள்ளன.

வடக்குக்கும் தெற்குக்கும் இடையிலான பொருளாதார ஏற்றத்தாழ்வு ஆழமாகியுள்ளது. மேம்பட்ட உள்கட்டமைப்பு வசதிகள், நன்கு பயிற்சிபெற்ற தொழிலாளர்கள் இருக்கும் இடங்களையே முதலீட்டாளர்கள் நாடுகிறார்கள் என்பது இதற்குப் பகுதியளவு காரணம். தனிநபர் வருமானத்தின் அடிப்படையில் மாநிலங்களுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுக் குறியீடு 2000ஆம் ஆண்டில், 0.25ஆக இருந்தது. 2020இல் அது 0.30ஆக அதிகரித்துவிட்டது.

குறிப்பாக, கர்நாடகத்துக்கும் பிஹாருக்கும் இடையில் ஒப்பிட்டால் இந்த விகிதம் 1.9இலிருந்து 3.91ஆக அதிகரித்துள்ளது. இன்று கர்நாடகத்தில் உள்ள ஒரு சராசரி நபர், பிஹாரில் உள்ள சராசரி நபரைக் காட்டிலும் 5.5 மடங்கு அதிகம் சம்பாதிக்கிறார். ஆந்திரப் பிரதேசம் (ரூ.1,14,324), கர்நாடகம் (ரூ.1,54,123), மகாராஷ்டிரம் (ரூ.1,33,356), கேரளம் (ரூ.1,34,878), தமிழ்நாடு (ரூ.1,45,528) ஆகிய மாநிலங்களின் தனிநபர் வருமானம் பிஹார் (ரூ.28,127), சத்தீஸ்கர் (ரூ.72,236), மத்தியப் பிரதேசம் (ரூ.58,334), ராஜஸ்தான் (ரூ.74,009), உத்தரப் பிரதேசம் (ரூ.39,371) ஆகியவற்றைவிட மிக அதிகம்.

**எந்த வகையில் மறுவரையறை?** நாடாளுமன்றத் தொகுதிகளை மறுவரையறை செய்வது வடக்கு–தெற்கு பேதங்களை ஆழப்படுத்தக்கூடும். மத்திய அரசின் கொள்கைகளைப் பின்பற்றி தெற்கு, மக்கள்தொகையைக் கட்டுப்படுத்தியுள்ளது. பெண் கல்விக்கான தொடர் செயல்பாடுகளின் விளைவாகத் தென் மாநிலங்களில் பெண்களின் மொத்தக் கருவுறுதல் விகிதம் நாட்டின் வேறு பல மாநிலங்களுக்கு மிகவும் முன்னதாகவே சரிந்துவிட்டது.

இதன் விளைவாகத் தென் மாநிலங்களில் மக்கள்தொகை வட மாநிலங்களைவிட மிகவும் மெதுவாக அதிகரித்தது. இந்திய மக்கள்தொகையில் தென் மாநிலங்களின் பங்கு 1971இல் 24.8%ஆக இருந்தது; 2021 அது 19.9%ஆகக் குறைந்துவிட்டது. இதே உத்தரப் பிரதேசத்தின் பங்கு 23%ஆக இருந்தது; 26%ஆக அதிகரித்துள்ளது.

அரசியல் அறிவியலாளர்கள் மிலன் வைஷ்ணவ், ஜேமி ஹின்ட்ஸன் மேற்கொண்ட கணக்கீடு ஒன்று, தொகுதி மறுவரையறைக்குப் பிறகு நாடாளுமன்றத்தில் இருக்கக்கூடிய 848 பிரதிநிதிகளில் உத்தரப் பிரதேசம் 143 உறுப்பினர்களைப் பெற வாய்ப்புள்ளது. இது 79% அதிகரிப்பாகும். கேரளத்தின் பிரதிநிதித்துவத்தில் மாற்றம் எதுவும் இருக்காது.

தமிழ்நாட்டில் உறுப்பினர் எண்ணிக்கையில் 10 மட்டுமே அதிகரிக்கும். மக்கள்தொகை தொடர்பான காரணங்களுக்காகத் தெற்கை அரசியல்ரீதியாக விளிம்புநிலைக்குத் தள்ளுவது சச்சரவுகளை அதிகரிக்கும். ஏற்கெனவே நிதி சார்ந்த விவகாரங்களில் இத்தகைய சச்சரவுகள் புலப்படத் தொடங்கிவிட்டன.

2011 மக்கள்தொகைக் கணக்கெடுப்பை அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசிடமிருந்து மாநில அரசுகளுக்கு வரி வருவாயைப் பகிர்ந்தளிக்கலாம் என்று 15ஆம் நிதிக் குழு முடிவெடுத்தது. அப்போது தென் மாநிலங்கள் இந்த நடவடிக்கை குறித்துக் கவலைதெரிவித்தன. 14ஆம் நிதிக் குழுவில் தென் மாநிலங்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்ட வரி வருவாய் 17.98%ஆக இருந்தது. 15ஆம் நிதிக் குழுவில் இது 15.8% ஆகக் குறைந்துவிட்டது.

ஜனநாயகச் செயல்முறையில் ஒரு தனிநபரின் சமமான குரலை அங்கீகரிப்பது எவ்வாறு முக்கியமோ அதேபோல் ஒரு கூட்டாட்சி அமைப்பில் பிராந்தியச் சமநிலையை அங்கீகரிப்பது அவசியமானது. மாகாணங்களின் கூட்டாக அமைந்த அமெரிக்கா போன்ற நாடுகள் நாடாளுமன்றத்தின் ஒரு அவையில் அனைத்து அலகுகளுக்கும் (மாநிலங்கள்) சமமான உறுப்பினர் எண்ணிக்கையை அளித்துள்ளன. இந்திய நிறுவனங்களை அதேபோல் சீரமைப்பதற்கு முன் விவாதங்கள் நடத்தப்பட வேண்டும். இதற்கு அனைவருடைய ஒப்புதலையும் பெறுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழில்: சு.கோபாலகிருஷ்ணன்

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

பிளாஸ்டிக் மாசுபாட்டை தடுக்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி

# இயற்கை பொருள் பயன்பாட்டுக்கு மாற்ற வேண்டும்

## ● ஆட்சியர்கள், வன அதிகாரிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தல்

● சென்னை

பிளாஸ்டிக் மாசுபாட்டை தடுக்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, அவர்களை இயற்கை பொருட்கள் பயன்பாட்டுக்கு மாற்ற வேண்டும் என்று மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச்சூழல், வனத் துறை அதிகாரிகள் மாநாட்டில் முதல்வர் ஸ்டாலின் அறிவுறுத்தியுள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் ஸ்டாலின் தலைமையில் மாவட்ட ஆட்சியர்கள், சுற்றுச்சூழல், வனத் துறை அதிகாரிகள் மாநாடு நேற்று நடைபெற்றது. இதில், சுற்றுச்சூழல், வனத்துறை தொடர்பாக மாவட்ட வாரியாக மேற்கொண்டுவரும் பல்வேறு திட்டப் பணிகள் குறித்து அதிகாரிகள் விவரித்தனர்.

இதைத் தொடர்ந்து, அவர்களுக்கு பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது:

வனப் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆகியவை இந்த அரசின் 2 முக்கிய கொள்கைகள். 'மீண்டும் மஞ்சப்பை' என்பது என் மனதுக்கு நெருக்கமான திட்டம். இதை பயன்தரும் மக்கள் திட்டமாக மாற்ற வேண்டியது உங்கள் கடமை. பிளாஸ்டிக் மாசுவை தடுக்க மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி, இயற்கை பொருட்கள் பயன்பாட்டுக்கு அவர்களை மாற்ற வேண்டும். இதனால், பசுமையான, இயற்கை சார்ந்த எதிர்காலத்தை நோக்கி தமிழகம் வளர முடியும்.

பிளாஸ்டிக் பயன்பாட்டை தவிர்க்கும் பணிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும். மீண்டும் மஞ்சப்பை திட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதை உறுதி செய்வதுடன், பள்ளிகள், சுயஉதவி குழுக்கள் என அனைத்து தரப்பினரையும் இதில் ஒருங்கிணைக்க வேண்டும். பிளாஸ்டிக் இல்லாத பொருட்களின் பயன்பாட்டை ஊக்குவிக்க வேண்டும்.

வனவிலங்குகள், இயற்கை வளங்களை பாதுகாக்க நீங்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மனித - வனவிலங்கு முரண்பாடுகள் உடனடியாக களையப்படுவதையும், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு தாமதமின்றி இழப்பீடு வழங்கப்படுவதையும் உறுதி செய்ய வேண்டும். கடல் அரிப்பு தடுப்பு, கரையோர பகுதிகளின் பாதுகாப்புக்கான வழிமுறைகளை கடலோர மாவட்ட ஆட்சியர்கள், வன அலுவலர்கள் உருவாக்க வேண்டும்.

சதுப்புநில தோட்டங்கள், கடல் புற்கள், பவளப் பாறைகளை வளமையோடு மீட்பதில் கவனம் செலுத்த வேண்டும். 14 ராம்சர் ஈர நிலங்களை கொண்டுள்ள தமிழகம், இந்திய அளவில் முதலிடத்தில் உள்ளது. பசுமை தமிழ்நாடு இயக்கம் மூலம் சங்ககால 18 மர வகைகளை சேர்ந்த 14 லட்சத்துக்கும் அதிகமான மரங்களை மக்களின் பங்களிப்புடன் அரசு நட்டுள்ளது. அவை நன்கு வளர சிறப்பு முயற்சி எடுக்க வேண்டும்.

தகுதியான பழங்குடியினர், மலைவாழ் மக்களுக்கு, தனிநபருக்கான அல்லது பொது பயனுக்கான அனுபவ உரிமை சான்று வழங்க வன உரிமைச்சட்டம் வழி செய்கிறது. இதுவரை 11,245 தனிநபர் அனுபவ உரிமை சான்றுகள், 650 பொது பயனுக்கான அனுபவ உரிமை சான்றுகள் வழங்கப்பட்டுள்ளன. இன்னும் பரிசீலனையில் உள்ள விண்ணப்பங்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில், மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட வன அலுவலர்கள் இணைந்து செயல்பட்டு, விரைவில் முடிவெடுக்க வேண்டும்.

இவ்வாறு முதல்வர் பேசினார்.

### சிறந்த பணிக்காக விருது

தொடர்ந்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, மேம்பாட்டுக்காக சிறப்பாக பணியாற்றியதற்காக, மாவட்ட ஆட்சியர்கள் தீபக் ஜேக்கப் (தஞ்சாவூர்), ஆர்.வி.ஷஜீவனா (தேனி), பி.என்.ஸ்ரீதர் (கன்னியாகுமரி) ஆகியோருக்கு கடந்த 2022-ம் ஆண்டுக்கான பசுமை விருதுகளை முதல்வர் வழங்கினார்.

தொடர்ந்து, தமிழக வனத்துறை வரலாற்றில் முதல்முறையாக, 2022-23-ம் ஆண்டில் சிறப்பாக பணியாற்றிய மாவட்ட வன அதிகாரிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. அந்த வகையில், வனங்குன்றா வனமேலாண்மை நடவடிக்கைக்காக ஸ்ரீவில்லிபுத்தூர் மேகமலை புலிகள் காப்பக துணை இயக்குநர் எஸ்.ஆனந்த், மனித - வன உயிரின மோதல்கள் மேலாண்மைக்காக ராமநாதபுரம் வன உயிரின காப்பாளர் பாகன் ஜெகதீஷ் சுதாகர், வன உரிமை சட்ட நடவடிக்கைகளுக்காக கன்னியாகுமரி வன உயிரின காப்பாளர் எம்.இளையராஜா ஆகியோருக்கு விருதுகளை முதல்வர் வழங்கினார்.

இந்த நிகழ்வுகளில் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, வனத் துறை செயலர் சுப்ரியா சாஹு உள்ளிட்ட செயலர்கள், முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் உள்ளிட்ட வனம், சுற்றுச்சூழல் துறை அதிகாரிகள் பங்கேற்றனர்.

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

### உயர் ரத்த அழுத்தம், அதிக ரத்த போக்கு முக்கிய காரணம்

# தமிழகத்தில் ஓராண்டில் 479 பிரசவ உயிரிழப்புகள்

## பொது சுகாதாரத்துறை ஆய்வில் தகவல்

**சென்னை**

தமிழகத்தில் பேறு கால மரணங்களைத் தடுக்க பல்வேறு நலத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மருத்துவப் பரிசோதனைகள்மற்றும்சிகிச்சைகள்மட்டும் இல்லாமல், கர்ப்பிணிகளுக்கு ஊட்டச் சத்தை உறுதி செய்யும் சிறப்பு திட்டங்களும் நடைமுறைப் படுகின்றன. இதனால், பிரசவ கால இறப்புகள் குறைந்தாலும், முற்றிலும் தடுக்க முடியவில்லை.

இந்நிலையில், கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் நடப்பாண்டு மார்ச் மாதம் வரையிலான காலகட்டத்தில் தமிழகத்தில் நிகழ்ந்த பேறுகால உயிரிழப்புகளுக்கான காரணங்களை பொது சுகாதாரத் துறை ஆய்வு செய்தது. அந்த ஆய்வின் முடிவில், ஓராண்டில் 479 உயிரிழப்புகள் ஏற்பட்டிருப் பதும், முக்கிய காரணமாக தலா 20 சதவீதம் உயர் ரத்த அழுத்தம், அளவுக்கு அதிக ரத்தப்போக்கு இருப்பதும் தெரியவந்தது.

அடுத்தபடியாக 10 சதவீத இதய பாதிப்புகள் ஆகும். அதேபோல், நரம்புசார் பாதிப்புகளாலும், ரத்த கிருமித் தொற்று காரணமாகவும் தலா 9 சதவீத உயிரிழப்புகள் ஏற் பட்டுள்ளன. நுரையீரல் பாதிப்புக் குள்ளாகி உயிரிழந்த கர்ப்பிணி கள் 7 சதவீதமாகவும், கருக்கலைப் பின் போது 5 சதவீதமும், கல்லீரல் பாதிப்புகளால் 4 சதவீத இறப்பு களும் பதிவாகியுள்ளன.

இதுதொடர்பாக பொது சுகா தாரத்துறை இயக்குநர் செல்வ விநாயகம் கூறும்போது, "கர்ப்ப காலத்தில் உயர் ரத்த அழுத்த பாதிப்பு ஏற்படுவது இயல்பானது. அதனை கட்டுப்பாட்டுக்குள் வைத் திருக்க தவறும் போதுதான் அதன் தீவிரம் அதிகமாகிறது. ரத்த அழுத் தம் அதிகமாக இருந்தால், வலிப்பு மற்றும் பக்கவாதம் ஏற்படும். அது ஒரு கட்டத்தில் உயிரிழப்புக்கு வழிவகுக்கும். ஹீமோகுளோபின் அளவை சரிவர பராமரித்தால் ரத்தப்போக்கு ஏற்படும்போது அதனை சரிசெய்ய முடியும்.

இவ்வாறாக பேறு காலத்தில் தொடர்ந்து மருத்துவப் பரிசோத னைகளையும், மருத்துவர்களின் பரிந்துரைகளையும் பின்பற்றி நடந்தால் உயிரிழப்புகளை தடுக்க முடியும்" என்றார்.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

புதன், அக்டோபர் 4, 2023

# நீதிபதிகள் நியமனம்: கால தாமதம் களையப்பட வேண்டும்

நாட்டின் பல்வேறு உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிப்பது தொடர்பான கொலீஜியம் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் மத்திய அரசு கால தாமதம் செய்வதாக உச்ச நீதிமன்றம் மீண்டும் தெரிவித்திருப்பது கவலைக்குரியது.

நீதிபதிகளை நியமிப்பதில் தாமதம் செய்யும் மத்திய அரசின் மீது நீதிமன்ற அவமதிப்புக்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பெங்களூரு வழக்கறிஞர்கள் சங்கம் உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது. இந்த மனுவை விசாரித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கௌல், சுதான்ஷு தூலியா அமர்வு, உயர் நீதிமன்ற நீதிபதிகளை நியமிப்பதற்காக நவம்பர் 2022இலிருந்து வழங்கப்பட்ட 70 பரிந்துரைகள் மத்திய அரசிடம் நிலுவையில் இருப்பதாகத் தெரிவித்துள்ளது. கடுமையான கலவரச் சூழல் நிலவும் மணிப்பூர் மாநிலத்தின் உயர் நீதிமன்றத்துக்குத் தலைமை நீதிபதியை நியமிப்பதற்கான பரிந்துரையும் அவற்றில் ஒன்று. மத்திய அரசு தலைமை வழக்கறிஞர் ஆர்.வெங்கடரமணி இது தொடர்பாக அரசின் விளக்கத்தைத் தர ஒரு வார காலம் அவகாசம் கேட்டதையடுத்து, வழக்கு விசாரணையை அக்டோபர் 9ஆம் தேதிக்கு நீதிபதிகள் ஒத்திவைத்துள்ளனர்.

உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தைப் பொறுத்தவரை உயர் நீதிமன்ற கொலீஜியம் அனுப்பும் பரிந்துரைகளை மத்திய அரசு அடிப்படைப் பரிசோதனைகளுக்குப் பிறகு உச்ச நீதிமன்ற கொலீஜியத்துக்கு அனுப்ப வேண்டும். ஆனால், இந்த 70 பரிந்துரைகளும் மத்திய அரசிடமே உள்ளன. பரிந்துரைகள் குறித்து மத்திய அரசுக்கு ஆட்சேபனை இருப்பதாகவும் தெரிவிக்கப்படவில்லை என்பதை நீதிபதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதற்கு முன்பு, கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்பட்ட சிலர், மத்திய பாஜக அரசை விமர்சித்தது உள்ளிட்ட அரசியல் காரணங்களுக்காக, அவர்களை நீதிபதிகளாக நியமிப்பதை மத்திய அரசு நிறுத்திவைத்திருந்ததாகக் குற்றம்சாட்டப்பட்டது. ஆனால், இந்த 70 பரிந்துரைகள் தொடர்பான கால தாமதத்துக்கு அப்படிப்பட்ட காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. மத்திய அரசு உச்ச நீதிமன்றத்தில் அளிக்கப்போகும் விளக்கத்தில் இதற்கான காரணங்கள் தெரிவிக்கப்படலாம். அவை நியாயமான நடைமுறைக் காரணங்களாகக்கூட இருக்கலாம்.

இந்தியாவில் உள்ள 25 உயர் நீதிமன்றங்களில் அங்கீகரிக்கப்பட்ட நீதிபதிகளின் மொத்த எண்ணிக்கை 1,140; ஆனால், தற்போது 774 நீதிபதிகள் மட்டுமே உள்ளனர். அதேநேரம், உயர் நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள வழக்குகளின் எண்ணிக்கை 60,72,729. இவற்றில் கிட்டத்தட்ட 75% வழக்குகள் ஓராண்டுக்கு மேலாக நிலுவையில் உள்ளவை. மத்திய நீதித் துறை, தேசிய நீதிசார் தரவுத்தளம் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட இந்தத் தரவுகள், உயர் நீதிமன்றங்களின் நீதிபதிகள் பற்றாக்குறையால் நீதி வழங்கலில் நிலவும் பிரச்சினையின் தீவிரத்தை உணர்த்தப் போதுமானவை.

மேலும், நீதிபதியாக நியமிக்கப்படுவதற்காகப் பரிந்துரைக்கப்பட்டிருந்த சிலர், நீண்ட கால தாமதம் காரணமாகக் கடந்த சில மாதங்களில் தாமாகவே பின்வாங்கிவிட்டதாக நீதிபதி கௌல் சுட்டிக்காட்டியிருக்கிறார். அதனால், தரமான நீதிபதிகளை நியமிக்கும் கொலீஜியத்தின் முயற்சிகளுக்குப் பின்னடைவு ஏற்படுவதாக அவர் தெரிவித்திருப்பது கவனத்துக்குரியது.

ஆகவே, உயர் நீதிமன்ற நீதிபதிகள் நியமனம் தொடர்பாகத் தன்னிடம் நிலுவையில் உள்ள பரிந்துரைகள் மீது மத்திய அரசு விரைவான நடவடிக்கை எடுக்க வேண்டும். உரிய காரணமின்றி நீதிபதிகள் நியமனத்தில் தாமதம் ஏற்படாமல் இருப்பதையும் உறுதிசெய்ய வேண்டும். மத்திய அரசுத் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் அளிக்கப்படும் விளக்கம் இதற்கான தொடக்கமாக அமையட்டும்.

EVA STALIN IAS ACADEMY

EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI
12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045
https://www.evastaliniasacademy.in/
Contact Number - +91-8678969915, +91-9940332851

# ஆசிய விளையாட்டில் பருல் சவுத்ரி, அன்னு ராணிக்கு தங்கம்


↑ பருல் சவுத்ரி


↑ அன்னு ராணி


↑ தேஜஸ்வின் சங்கர்


↑ பிரவீன் சித்ரவேல்


↑ வித்யா ராம்ராஜ்

**ஹாங்சோ**

19-வது ஆசிய விளையாட்டு போட்டி சீனாவின் ஹாங்சோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் நேற்று நடைபெற்ற மகளிருக்கான 5 ஆயிரம் மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் பருல் சவுத்ரி பந்தய தூரத்தை 15:14.75 விநாடிகளில் கடந்து தங்கப் பதக்கம் வென்றார். பந்தயத்தின் கடைசி சில மீட்டர் தூரத்தில் ஜப்பானின் ரிகிகா ஹிரோனகாவை முந்தி அசத்தினார் பருல் சவுத்ரி.

மகளிருக்கான ஈட்டி எறிதலில் இந்தியாவின் அன்னு ராணி 62.92 மீட்டர் தூரம் ஈட்டியை எறிந்து தங்கப் பதக்கம் வென்றார். ஆசிய விளையாட்டு வரலாற்றில் மகளிர் ஈட்டி எறிதலில் இந்தியா தங்கப் பதக்கம் வெல்வது இதுவே முதன்முறையாகும்.

400 மீட்டர் தடை தாண்டும் ஓட்டத்தில் இந்தியாவின் வித்யா ராம்ராஜ் பந்தய தூரத்தை 55.68 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் வென்றார். இவர், தமிழகத்தை சேர்ந்தவர் ஆவார். ஆடவருக்கான 800 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவின் மொகமது அஃப்சல் 1:48.43 விநாடிகளில் பந்தய தூரத்தை கடந்து வெள்ளிப் பதக்கம் வென்றார்.

ஆடவருக்கான டிரிப்பிள் ஜம்ப்பில் இந்தியாவின் பிரவீன் சித்ரவேல் 16.68 மீட்டர் நீளம் தாண்டி வெண்கலப் பதக்கம் வென்றார். பிரவீன் சித்ரவேல் தமிழகத்தை சேர்ந்தவர் ஆவார். ஆடவருக்கான டெகத்லானில் இந்தியாவின் தேஜஸ்வின் சங்கர் 7,666 புள்ளிகள் குவித்து தேசிய சாதனையுடன் வெள்ளிப் பதக்கம் வென்றார். ஆசிய விளையாட்டு போட்டி டெகத்லானில் கடைசியாக 1974-ம் ஆண்டு விஜய் சிங் சவுகான் பதக்கம் வென்றிருந்தார். அதன் பின்னர் தற்போது தேஜஸ்வின் சங்கர் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார்.

மகளிருக்கான குத்துச்சண்டை 75 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் லோவ்லினா போர்கோஹைன் 5-0 என்ற கணக்கில் தாய்லாந்தின் பைசன் மணிகோனை வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். 54 கிலோ எடைப் பிரிவில் இந்தியாவின் பிரீத்தி பவார் அரை இறுதியில் 0-5 என்ற கணக்கில் சீனாவின் சாங் யுவானிடம் தோல்வி அடைந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

**வில்வித்தை**

வில்வித்தையில் ஆடவருக்கான தனிநபர் காம்பவுண்ட் பிரிவில் இந்தியாவின் ஓஜாஸ் டியோடலே, அபிஷேக் வர்மா ஆகியோர் இறுதிப் போட்டிக்கு முன்னேறினர். இதன் மூலம் இந்த பிரிவில் இந்தியாவுக்கு தங்கம், வெள்ளிப் பதக்கம் உறுதியாகி உள்ளது. மகளிர் பிரிவில் இந்தியாவின் ஜோதி சுரேகா இறுதிப் போட்டிக்கு முன்னேறினார். இதன் மூலம் அவர், குறைந்தபட்சம் வெள்ளிப் பதக்கத்தை உறுதி செய்துள்ளார்.

**கிரிக்கெட்**

ஆடவருக்கான கபடியில் இந்திய அணி தனது முதல் ஆட்டத்தில் 55-18 என்ற புள்ளிகள் கணக்கில் வங்கதேசத்தை வீழ்த்தியது. ஆடவருக்கான டி 20 கிரிக்கெட் போட்டியில் இந்திய அணி 23 ரன்கள் வித்தியாசத்தில் நேபாளம் அணியை வீழ்த்தி அரை இறுதிக்கு முன்னேறியது. முதலில் பேட் செய்த இந்திய அணி 4 விக்கெட்கள் இழப்புக்கு 202 ரன்கள் குவித்தது. யஷஸ்வி ஜெய்ஸ்வால் 49 பந்துகளில், 7 சிக்ஸர்கள், 8 பவுண்டரிகளுடன் 100 ரன்கள் விளாசினார். 203 ரன்கள் இலக்கை துரத்திய நேபாள அணியால் 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்புக்கு 179 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது.

ஆடவருக்கான படகோட்டத்தில் இரட்டையர் 1000 மீட்டர் பிரிவில் இந்தியாவின் அர்ஜுன் சிங், சுனில் சிங் சலாம் கூட்டணி பந்தய தூரத்தை 3:53.329 விநாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கம் வென்றது. இந்த போட்டியில் இந்தியா, 1994-ம் ஆண்டுக்குப் பிறகு தற்போதுதான் பதக்கம் வென்றுள்ளது.

**பதக்க பட்டியல்**

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 161 | 90 | 46 | 297 |
| ஜப்பான் | 33 | 47 | 50 | 130 |
| கொரியா | 32 | 42 | 65 | 139 |
| இந்தியா | 15 | 26 | 28 | 69 |

# 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியல் நோபல் பரிசு


↑ (இடமிருந்து வலம்) பெரன்க் க்ரவுஸ், ஆனி ஹூ’லியர், பியர்லி அகோஸ்டினி.

**ஸ்டாக்ஹோம்**

இயற்பியலுக்கான நோபல் பரிசு 3 விஞ்ஞானிகளுக்கு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

மருத்துவம், இயற்பியல், வேதியியல், இலக்கியம், அமைதி, பொருளாதாரம் ஆகிய 6 துறைகளில் சாதனை படைத்தவர்களுக்கு நோபல் பரிசு வழங்கப்படுகிறது. அந்த வகையில் 2023-ம் ஆண்டுக்கான நோபல் பரிசுகள் கடந்த 2-ம் தேதி முதல் அறிவிக்கப்படுகிறது. முதல் நாளில் மருத்துவத்துக்கான நோபல் பரிசு ட்ரூ வெய்ஸ்மேன், கட்டாலின் கரிக்கோவுக்கு அறிவிக்கப்பட்டது. 2-ம் நாளான் நேற்று இயற்பியலுக்கான நோபல் பரிசு அறிவிக்கப்பட்டது. இதன்படி அமெரிக்காவின் ஒகையோ மாகாண பல்கலைக்கழக பேராசிரியர் பியர்லி அகோஸ்டினி, ஜெர்மனியின் மேக்ஸ் பிளான்க் இன்ஸ்டியூட் பேராசிரியர் பெரன்க் க்ரவுஸ், ஸ்வீடனின் லூண்ட் பல்கலைக்கழக பேராசிரியர் ஆனி ஹூ’லியர் ஆகிய 3 விஞ்ஞானிகளுக்கு இயற்பியலுக்கான நோபல் பரிசு பகிர்ந்தளிக்கப்படுகிறது.

இதுகுறித்து ராயல் ஸ்வீடிஷ் அகாடமி ஆப் சயின்சஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:

அணுவுக்கு உள்ளே என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ள உதவும் மிக குறுகிய அதிர்வு கொண்ட ஒளியை உருவாக்குவது தொடர்பான ஆய்வில் பியர்லி அகோஸ்டினி, பெரன்க் க்ரவுஸ், ஆனிஹூ’லியர் ஆகிய 3 விஞ்ஞானிகளும் வெற்றிபெற்றுள்ளனர். இதன் மூலம் எலக்ட்ரான்களின் நகர்வை மிகத் துல்லியமாக கணக்கிட முடியும்.

எலக்ட்ரான்களை பொறுத்தவரை அட்டோசெகன்ட் பொழுதில் மாற்றங்கள் நிகழ்கின்றன. அட்டோசெகன்ட் என்பது ஒரு விநாடியில் மிக, மிகச் சிறிய பகுதியாகும். மூன்று விஞ்ஞானிகளின் ஆய்வால் அட்டோசெகன்ட் பொழுதில் எலக்ட்ரான்களில் ஏற்படும் மாற்றத்தை மிகத் துல்லியமாக கணக்கிட முடியும். இதன்மூலம் எலக்ட்ரான்களின் உலகத்தில் நுழைவதற்கான கதவு திறந்திருக்கிறது. இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

இயற்பியலுக்கான நோபல் பரிசுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு உள்ள 3 விஞ்ஞானிகளுக்கு ரூ.8.30 கோடி ரொக்கம் பகிர்ந்து அளிக்கப்படும்.